# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2025 ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.61/2018–ல் இ.ம.எண். 1/2023**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாமரைப்பாடி கிராமம், தாமரைப்படி, களத்துவீடு என்ற முகவரியில் வசிக்கும் செல்லமுத்து கவுண்டர் மகன் S. பெரியசாமி

.... மனுதாரர் /வாதி

/ எ தி ர் /

1. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாமரைப்பாடி கிராமம், தாமரைப்பாடி, களத்துவீடு என்ற முகவரியில் வசிக்கும் கருப்பணகவுண்டர் மகன் K. செல்லமுத்து கவுண்டர் (இறப்பு)
2. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாமரைப்பாடி கிராமம், தாமரைப்பாடி, களத்துவீடு என்ற முகவரியில் வசிக்கும் லேட். K. செல்லமுத்துகவுண்டர் மகன் நல்லம்மாள்
3. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாமரைப்பாடி கிராமம், தாமரைப்பாடி, களத்துவீடு என்ற முகவரியில் வசிக்கும் முத்துச்சாமிகவுண்டர் மகன் M. ராமசாமி
4. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாமரைப்பாடி கிராமம், தாமரைப்பாடி, களத்துவீடு என்ற முகவரியில் வசிக்கும் M. பெரியசாமி மகன் P. நரேஷ்குமார்
5. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாமரைப்பாடி கிராமம், தாமரைப்பாடி, களத்துவீடு என்ற முகவரியில் வசிக்கும் பெரியசாமி மகன் P. கார்த்திகேயன்

.... எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் அசல் வழக்கு எண் 61/2018–ல் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு பிராதினை திருத்திக் கொள்ள அனுமதியளிக்கக்கோரி

உவிமுச கட்டளை 6 விதி 17 மற்றும் 18 மற்றும் பிரிவு 151ன் படியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் – 30.3.2023
இம்மனு கோப்பில் எடுக்கப்பட்ட நாள் – 28.6.2023

இம்மனு என் முன்னர் 23.01.2025ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு K. சவடமுத்து, அவர்களும், 2ம் எதிர்மனுதார்/2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. ஆறுமுகம், அவர்களும் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S. விஜயராஜன், அவர்களும், 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு C. குமரேசன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாலும், 3ம் எதிர்மனுதாரர் வழக்கு விசாரணையின்போது அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்

## உத்தரவாணை

1 இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

2 செலவுத் தொகை இல்லை.

## திருத்தல் விபரம்

1) பிராதில் பிரதிவாதிகள் Short Caused Title–ல் " 1."என்பதற்கு அடுத்து "திரு"என்பதை அடித்துவிட்டு, "லேட்"என்றும், "K. செல்லமுத்து கவுண்டர்" என்பதற்கு எடுத்து (இறப்பு)என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

"5. திரு. P. கார்த்திகேயன்"என்பதற்கு கீழ்,

"1ம் பிரதிவாதி 4.8.2021ம் தேதியில் இறந்துவிட்டார். அவருக்கு வாதியைத் தவிர வேறு வாரிசுகள் இல்லையென்று வாதியால் தாக்கல் செய்துள்ள மிமோ ரிக்கார்டு செய்யப்பட்டுள்ளது."என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2) பிராது பாரா 2. பிரதிவாதிகள் என்றுள்ள Long caused Title–லில் 1ம் பிரதிவாதியின் முகவரியில் உள்ள "K. செல்லமுத்துகவுண்டர்" என்பதற்கு அடுத்து "(இறப்பு)"என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

3) பிராது பாரா 13 க்கு அடுத்து,

"13(ஏ). தாவா வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது வாதியின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி 2017ம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்திலிருந்து பக்கவாத நோயால் உடம்பிற்கு சௌகரியமில்லாமல் படுத்த படுக்கையில் இருந்து வைத்தியம் பார்த்து வந்துள்ளார். அது குணமாகாத நிலையில் நாளுக்கு நாள் அதிகமாகி 2018ம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்திலிருந்து உடம்பு பலவீனமாகி நடமாட முடியாமலும், பேச முடியாமலும் இருந்து வந்து 4.8.2019ம் தேதியில் இறந்து விட்டார். இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு வாதியே தனது வீட்டில் வைத்து ஈமகாரியங்களை செய்து முடித்தார். இறந்த 1ம் பிரதிவாதிக்கு வாதி மட்டும் வாரிசாக உள்ளார். தாவா வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு ½ பாகம் உண்டு. அதேபோல் வாதிக்கும் ½ பாகம் உண்டு. 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவருடைய ½ பாக சொத்துக்கள் வாரிசு என்ற அடிப்படையில் வாதிக்கு சட்டப்படி பாத்தியப்பட்டுள்ளது. ஆகவே தாவா வழக்குச் சொத்துக்கள் முழுவதும் வாதிக்கு பாத்தியப்பட்டு மேற்படி சொத்துக்களை வாதி தனது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். தாவா வழக்கு சொத்துக்களில் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எவ்வித பாத்தியமும் உரிமையும் அனுபவமும் கிடையாது.

13(பி) தாவா வழக்கு சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை பரிகாரமும், அதன் தொடர் பரிகாரமாக தாவா வழக்கு சொத்துக்களை வாதி அனுபவித்து வருவதை 2 முதல் 5 பிரதிவாதிகளோ அவர்களது வகை ஆட்களோ ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்துக் கட்டளை உத்திரவு பரிகாரமும் பெறவும் வாதிக்கு சட்டப்படி உரிமையுண்டு, அதனை 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆட்சேபிக்கவோ, மறுக்கவோ உரிமை கிடையாது." என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4) பிராது பாரா 15ல் 2வது வரியில் "செக்சன்"என்பதற்கு அடுத்து "37(2)ன்படி மவுண்ட் ரூ.5,000/–" என்று இருப்பதை அடித்துவிட்டு அதே இடத்தில் "25(b)ன் படி மவுண்ட் ரூ.33,159/–" என்று சேர்த்துக் கொண்டும்,

4 வது வரியில் ஆக மொத்தம் "மவுண்ட் ரூ.5,604/-"என்று இருப்பதை அடித்துவிட்டு அதே இடத்தில் "மவுண்ட் ரூ.33,763/-"என்று சேர்த்துக் கொண்டும்,

மவுண்டு விபரம் என்பதற்கு கீழ்,

"A" பரிகாரத்திற்கு தாவா சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.22,10,447/-ல் என்பதற்கு அடுத்து "வாதியில் ½ பாக "என்பதை அடித்து விட்டு, அதே இடத்தில் "பாதி"என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

"அதற்கு கோர்ட் பீஸ் ஆக்ட் செக்சன்"என்பதற்கு அடுத்து "37(2)ன்படி மவுண்ட் ரூ.5,000.00"என்பதை அடித்து விட்டு அதே இடத்தில் " 25(b)"ன்படி மவுண்ட் ரூ.33,159.00"என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்

அதற்கு கீழ் கடைசியில்,

" ஆக மொத்தம் ரூ.11,25,224.00" என்பதற்கு அடுத்து "ரூ.5,604.00"என்பதை அடித்துவிட்டு அதே இடத்தில், "ரூ.33,763.00" என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

5) Prayer காலத்தில், "A,B"என்று கண்டுள்ள பாராக்களில் உள்ளவைகளை நீக்கம் செய்து விட்டு, அதே இடத்தில்

(A) தாவா வழக்கு சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை பரிகாரம் வழங்கும் படிக்கும்

(B) அதன் தொடர் பரிகாரமாக தாவா வழக்கு சொத்துக்களை வாதி அனுபவித்து வருவதை 2 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித தடையும் இடையூறுகளும், அக்கிரம பிரவேசமும் செய்யாமல் இருக்கும்படி மேற்படியார்களின் பேரில் நிரந்தர உறுத்துக் கட்டளை உத்தரவு வழங்கும்படிக்கும்" என்று சேர்த்துக்கொள்ள வேண்டும்.

"C" பரிகாரத்தில் "தாவா வழக்கு சொத்துக்களை வாதி தன்னுடைய ½ பாக சொத்துக்களை பிரித்து தனித்த சுவாதீனம் பெறும் வரை " என்று இருப்பதை நீக்கம் செய்ய வேண்டும்"

**2025ம்** ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையைப் பதித்து வழங்கப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.28 13:30:55 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**திண்டுக்கல்**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
I.A.No.1/2023 in O.S.No.61/2018
உத்தரவாணை
நாள் 23.1.2025